DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM
Present : Thiru. C.Rajasekar, B.A, B.L.,
District Munsif, Uthamapalayam.

**<u>OS.No.45/2022</u>**

**CNR.No: TNTH06-000082 -2022 )**

| | | | |
|---|---|---|---|
| Name | : அழகேந்திரன் | Town | கூடலூர் |
| Father's Name | : சோலைமலை | Occupation | : |
| Age | : | **PW1** | |

---

நாள் : 03.04.2025

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் டிப்ளமோ படித்துள்ளேன். வழக்கு சொத்து எனது தந்தையால் சம்பாதிக்கப்பட்ட சொத்து என்றால் இல்லை, அது பரம்பரை சொத்தாகும். பரம்பரை சொத்து என்றால் எவ்வாறு யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது தாத்தா சின்னபெருமாள்தேவருக்கு பட்டாவின் அடிப்படையில் பாத்தியப்பட்டதாகும். எனது தாத்தாவிற்கு கிரையத்தின் அடிப்படையில் மேற்படி வழக்கு சொத்து பாத்தியமா என்றால் இல்லை, அவருக்கும் பூர்வீகச்சொத்தாகும். வழக்கு சொத்திற்கு ஆதியில் மூல பதிவு பத்திரங்கள் உள்ளதா என்றால் இல்லை, 22.02.1981ம் ஆண்டு என் தந்தை மற்றும் அவரது சகோதரர்களுக்கிடையே பாகப்பாத்திய விடுதலைப்பத்திரம் பதிவாகியுள்ளது.

2) பெரியமாயத்தேவருக்கு மொத்தம் எத்தனை பிள்ளைகள் என்றால் சோலைமலைத்தேவர், பெரிய பெருமாள் தேவர் மற்றும் எனது தாத்தா சின்ன பெருமாள்தேவர் ஆக மொத்தம் மூன்று பிள்ளைகள் ஆவார்கள். சோலைமலைத்தேவர், பெரிய பெருமாள் தேவர் மற்றும் எனது தாத்தா சின்ன பெருமாள்தேவர் ஆகிய மூவருக்குமிடையே பத்திரம் எழுதப்பட்டதா என்றால் இல்லை, வாய்க்கறலாகத்தான் பிரிக்கப்பட்டுள்ளது. சோலைமலைத்தேவருக்கு

எத்தனை பிள்ளைகள் என்றால் பெரியமாயன் (எ) ராசு, ராமநாதன், கோபாலன் ஆகிய மூன்று பிள்ளைகள் ஆவார்கள். பெரியபெருமாளுக்கு மொத்தம் எத்தனை பிள்ளைகள் என்றால் சுந்தர்ராஜ் மற்றும் பெருமாள் ஆகிய இரண்டு பிள்ளைகள் ஆவார்கள்.

3) சின்னபெருமாள் என்பவருக்கு மொத்தம் எத்தனை பிள்ளைகள் என்றால் பெரியமாயன், இராமச்சந்திரன், எனது தந்தை சோலைமலை மற்றும் நடராஜன் ஆகிய நான்கு பிள்ளைகள் ஆவார்கள். சோலைமலைத்தேவர், பெரிய பெருமாள் தேவர் மற்றும் எனது தாத்தா சின்ன பெருமாள்தேவர் ஆகியோர் உயிருடன் இருந்தபோது அவர்களது வாரிசுகளின் பெயர்களில் உயிலோ அல்லது வேறு ஏதேனும் பத்திரங்களோ ஏற்படுத்தினார்களா என்றால் ஏற்படுத்தவில்லை. பெரியபெருமாள் மகன் சுந்தர்ராஜுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் ரெங்கநாதன், ரெங்கராமன், பெருமாள் ஆகிய மூன்று பிள்ளைகள் ஆவார்கள். 2ம் பிரதிவாதி சுந்தர்ராஜுவின் மருமகள் என்றாலும், 3ம் பிரதிவாதி சுந்தர்ராஜுவின் மகன் வழிப்பேரன் என்றாலும் சரிதான்.

4) 1981ம் வருடத்திற்கு முன்பு வரை வழக்கு சொத்து தொடர்பாக எங்கள் மூதாதையர்களுக்கிடையே பாகப்பிரிவினை எதுவும் எழுத்துப்பூர்வமாக ஏற்படுத்திக்கொள்ளப்படவில்லை என்றால் சரிதான். பெரியமாயத்தேவர் மகன் சோலைமலை பெயரில் பட்டா மட்டும் ஏற்பட்டுள்ளது என்றால் ஆமாம், ஏற்பட்டுள்ளது. வழக்கு சொத்து தொடர்பான அ பதிவேடு இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்படவில்லை. வழக்கு சொத்துக்கள் முழுவதும் பெரியமாயத்தேவரின் வாரிசுகள் அனைவருக்கும் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களைப்பொறுத்து தற்போது வரை பிரித்து அளவீடு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல, நாங்கள் பிரித்துத்தான் அனுபவித்து வருகிறோம்.

5) சோலைமலையின் வாத்தியாரின் வாரிசுகள் அவர்கள் பாகச்சொத்துக்களை மூன்றாம் நபர்களுக்கு விற்பனை செய்துள்ளார்கள் என்றால்

சரிதான். இதுவரை வழக்கு சொத்துக்களில் விற்பனை செய்யப்பட்டுள்ள சொத்துக்களுக்கும், எஞ்சிய சொத்துக்களுக்கும் கூட்டுப்பட்டா வழங்கப்பட்டுள்ளதா என்றால் வழங்கப்படவில்லை, தனிப்பட்டா தான் இருந்து வருகிறது. வழக்கு சொத்திற்கான சர்வே எண். 1370/6 என்றால் சரிதான். அழகர் இறப்பிற்கு பிறகு வழக்கு சொத்திற்கு அழகர்தேவர் மகளும் பெருமாள்தேவரின் மனைவியுமான பேச்சியம்மாள் பெயரில் பட்டா இருந்து வந்தது என்று சொன்னால் அது தவறான பட்டா ஆகும். பேச்சியம்மாள் உயிருடன் இருந்தபோது வழக்கு சொத்து சர்வே எண். 1370/6 சொத்தில் இலவமரங்கள் நடப்பட்டிருந்தது என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை.

6) பின்னர் வழக்கு சொத்தினை எனது தகப்பனாருக்கு பேச்சியம்மாளின் வாரிசுகளான பிரதிவாதிகள் ஒத்திக்கு கொடுத்தனர் என்றால் எனக்கு அதுபற்றி சரியாக தெரியவில்லை. வழக்கு சொத்து சர்வே எண். 1370/6 மற்றும் அதன் தொடர்புடைய இதர சர்வே எண் சொத்துக்கள் முழுவதும் தற்போது வரை 2ம் பிரதிவாதியின் கணவர் பெயரில் பட்டா இருந்து வருகிறது என்றால் அது தவறாகும். 1981ம் வருடத்தில் ஏற்படுத்தப்பட்ட பாகப்பாத்திய விடுதலை பத்திரத்தில் வழக்கு சொத்து சர்வே எண். 1370/6 சொத்தானது உள்ளடங்கவில்லை என்றால் சரியல்ல, 1981ம் ஆண்டில் வழக்கு சொத்து உட்பிரிவே ஆகவில்லை, அதனால் முழுசொத்தானது 97–1/2 செண்டிற்கும் சேர்த்து பாகப்பாத்திய விடுதலைபத்திரம் எழுதப்பட்டது.

7) வழக்கு சொத்து எங்கள் அனுபவித்தில் இருப்பதாக வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தில் தற்போது வரை பிரதிவாதிகள் உளுந்து மற்றும் துவரை பயிர்கள் செய்து விவசாயம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் அது பொய்யாகும். என் தந்தை பெயர் தங்காவா அல்லது சோலைமலையா என்றால் சோலைமலை தான் ஆவணங்களில் உள்ள பெயர் ஆகும், தங்கா என்பது வழக்கத்தில் அதுபோன்று அழைக்கப்படும் பெயராகும்.

**(வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை**

**தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)**

(ஓ.ம்) C. ராஜசேகர், B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.